www.tamilarangam.net

# ஈழச்செய்தி

கடிதம் 34

மே -86




## ஈழப்போரை முன்னெடுப்போம்
## இயக்கப்போரை தவிர்ப்போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழப்பிரச்சினையில் இந்திய நிலைப்பாடு

**தமிழ் மக்களின் நியாயமான அரசியல் பொருளாதார உரிமைகள் வழங்கப்பட வேண்டும்!**

**இலங்கை மீது படையெடுக்கும் திட்டம் இல்லை—இந்தியா.**

இந்தியாவின் தேசியப் பிரச்சினை ஆகிவிட்ட ''ஈழப்பிரச்சினை'' இன் தீர்வென்பது எந்த வழிமுறையில் கிடைக்க வேண்டும் என்பதில் இந்திய அரசின் நிலைப்பாடு என்பது ஒரு கேள்விக்குறியே?

ஏனெனில் இதுவரை இந்திய அரசானது சமாதானம், பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பவற்றில் கொண்ட நம்பிக்கையின் நிமித்தம் ''தீம்பு'' உருவானது. கருவிலேயே அது தும்பு தும்பாகவும் போனது. இதற்கு மாறாக அதாது இந்தியாவின் முயற்சிக்கு முற்று முழுதாக முரணாகவே சிறிலங்கா அரசு செயற்பட்டது. செயற்பட்டுக் கொண்டும் இருக்கிறது. இந்திய அரசின் நல்லெண்ணத்தையும், நடவடிக்கைகளையும் அசட்டை செய்தது. இந்திய அமைச்சர்களைப் பற்றி அவதூறுகளை அள்ளி வீசியது.

ஒரு முழுமையான ஆயுத ரீதியான மக்கள் போராட்டத்தைச் சிறிலங்கா இராணுவம் சற்றும் எதிர்பார்க்காததோடு, எதிர்கொள்ளவும் திராணியற்றுக் கிடந்ததினால்; சிறிலங்கா அரசு இராணுவத்திற்குப் புதிய தெம்பூட்டவும், வெளிநாட்டுப் பயிற்சிகளையும், ஆயுதங்களையும், கூலிக்கொலை ஆலோசகர்களையும் இறக்குமதி செய்வதற்குமான கால அவகாசங்களைக் கைப்பற்றிக்கொள்வதற்குமாகவேதான் உண்மையில் சிறிலங்கா பாசிச அரசு பேச்சுவார்த்தைப் பூச்சாண்டி காட்டத் தொடங்கியது என்பதையும் இந்திய அரசு இப்போது தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமலுமில்லை.

ஓர் அயல் நாட்டுடன் ஆக்கிரமிப்புப்போர் தொடுக்குமளவிற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டு! ஒரு அயல் தேசத்தில் மேலாதிக்க அரசு தன் இராணுவப் பட்டாளங்களைக்குவித்து வைத்திருப்பது போன்ற நிலைப்பாட்டிலும் சிறிலங்கா அரசு செயற்படுகின்றது. இந்நிலையில் :

- மனிதாபிமான அடிப்படையில் சிறிலங்கா அரசை இந்திய அரசு அணுக முடியா நிலையிலும்;
- ஒளிவு மறைவு இன்றியே இந்திய தேசத்தின் எதிரிகளுடனும், சர்வதேச பிற்போக்குக் கும்பல்களுடனும் தனது நெருங்கிய உறவை சிறிலங்கா அரசு வளர்த்துக்கொண்டுள்ள நிலையிலும் :
- வெளிப்படையாகவே இந்திய அரசை சிறிலங்கா தான்தோன்றித்தனமாக எதிர்க்கும் நிலையிலும் :
- பேச்சுவார்த்தை, அரசியல்தீர்வு போன்ற அணுகுமுறைகள் அணுவளவேனும் சரிவர முடியாது என்பது உறுதியாக்கப்பட்ட நிலையிலும் :
- இலங்கையிலுள்ள மக்கள் அனைவரும் சகோதரர்களாக ஒற்றுமையோடு வாழ்வது நல்லதுதான். ஆனால் அதற்கான வரலாற்றுச்சாத்தியம் அறவே இல்லை என்கின்ற நிலையிலும் :
- ஈழ மக்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்! அவர்கள் தேசிய இன பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்து மீள வேண்டும்! அவர்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்! ஈழமக்களுக்குத் துரோகம் செய்யக் கூடாது என்கின்ற இந்திய அரசின் நல்லெண்ண நிலையிலும்; இந்திய அரசு உள்ளது.

இதைவிட, இந்தியா தனது எதிரி என்றும், பாக்கிஸ்தானே தனது நண்பன் எனவும் J R. ஜெயவர்த்தனா அண்மையில் பத்திரிகையாளர்கட்கு கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே இந்திய அரசு சிறிலங்கா அரசோடு பகிரங்கமாக முரண்படாமலிருக்க முடியுமா? என்பதும் ஈழப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசின் உறுதியான இறுதி நிலைப்பாடு என்ன? என்பதும் இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய சக்திகளை மட்டுமல்லாது உலகத்தையே உலுப்பிக்கொண்டிருக்கும் ஒரு கேள்விக்குறியே ! ! !

## ஆயுதத்தில் "ஹீரோ" அரசியலில் "ஸீரோ"

ஒரு தேசிய இனத்தின் மீதான பொதுவான அடக்குமுறையின் போது; ஆயுத ரீதியான போராட்ட இயக்கங்கள் பல உருவாகுவது என்பது தவிர்க்க முடியாத ஓர் நிர்ப்பந்தம். ஏனெனில் பொது எதிரி ஆள்பார்த்து. பிரதேசங்கள் பார்த்து தன் அடக்குமுறையைத் திணிப்பதில்லை!

எந்தவொரு அமைப்பாக இருந்தாலும் அதிலுள்ள போராளிகள் ஒரே இலட்சியத்துக்காகப் புறப்பட்டவர்களே என்பதில் சந்தேகமில்லை. ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் கூட வேறு வேறு இயக்கங்களில் இருக்கின்றார்கள் என்பதும் ஈழப் போராட்ட வரலாற்றுக் கண்கூடு.

இந்நிலையில் ஒரு இயக்கம் இன்னோர் இயக்கத்தை ஆதிக்கம் செலுத்த முற்படுவதும், அடக்கியாள முற்படுவதும், அழித்திடத் துடிப்பதும்; உண்மைக்கு மாறான அபாண்டமான பழிகளை அள்ளிக்கொட்டுவதும், கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடுவதும் போன்ற நடவடிக்கைகள் என்பன; ஒருபக்கம் அரசியல் அறிவீனத்தை (பாவம்) வெளிக்காட்டினாலும் இன்னொருபக்கம் புரட்சிகர போராட்ட வரலாற்றையே அழித்துவிட முனைவதற்கு ஒப்பாகும்.

இந்நடவடிக்கைகள் ஈழ மண்ணில் ஏற்படுமாயின் காலப் போக்கில் மக்கள் உண்மைகளை உணர்ந்து கொள்ளும்போது, சிந்திக்கத் தொடங்கும்போது எந்தவொரு ஆயுத அராஜக அடாவடித்தன இயக்கத்தையும் மக்கள் தூக்கியெறிய நேரிடும்.

என்பது மட்டுமல்ல போராட்டம். புரட்சி. மக்கள் வாழ்வு என்னும் அரசியல் குணாம்சங்களைச் ஸீரோவாக்கி; முட்டிமோதிக் கொண்டு ஆயுத ஹீரோயிச அறியாமையினால் அழிந்து விடுவார்கள் என்பதும் வரலாற்றுக் கண்கூடு.

www.tamilarangam.net

## மக்களிடமிருந்து அந்நியப்படும் நடவடிக்கை!

### ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) அறிக்கை

இந்த ஆயுத இறுமாப்பு அராஜக நடவடிக்கை சம்பந்தமாக நான்கு இயக்கங்களும் கூட்டுச் சேர்ந்த ஈழத்தேசியவிடுதலை முன்னணியிலுள்ள (EPRLF, TELO, EROS) என்பன பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது;

- **தமிழீழ விடுதலை இயக்கத் தலைவரைக் கொல்ல; தம்பி பிரபாகரன் மேற்கொள்ளும் அதிதீவிர முயற்சியையும்; டெலோ முகாம்கள் மீதும், ஆதரவாளர்கள் மீதும் மேற்கொள்ளும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.**
- **இது குறித்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நான்கு இயக்கங்களின் கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ENLF) உடன் தொடர்பு கொள்ள வேண்டும்.**
- **விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் சிறிலங்கா அரசுக்கெதிராக செயற்படும் அனைத்து ஈழவிடுதலை இயக்கங்களும் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும்.**
- **மக்கள் மீதான சிறிலங்கா அரசின் மிருகத்தனமான வன்முறைக்கும், அடக்குமுறைக்கும் எதிராகத்தான் நாம் ஆயுதத்தை தேர்ந்தெடுத்தோம்! என்பதை புலிகள் இயக்கத்தினருக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். இராணுவத்திற்கு எதிரான ஆயுதத்திற்கே மக்கள் ஆதரவு கிடைத்தது.**
- **புலிகள் இயக்கத்தின் இந்நடவடிக்கை மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும். மக்களிடமிருந்து நாம் அந்நியப்பட்டு விடுவோம். சிங்கள இராணுவத்தின் கை பலப்பட்டுவிடும்.**



*புலிகளின் இரத்த தாகத்திற்கு இரையான ஈழப்போராளி — இவனின் இலட்சியங்கள் சாகவில்லை!*

# இன்னொரு ஒவிக்கிடைப் படுகொலை!

**நூற்றுக்கும் மேற்பட்ட ஈழப் போராளிகள் பலி போராட்ட வரலாற்றுக் கறை!**

**—டெலோ அறிக்கை**


சக விடுதலை இயக்கத் தலைவரைக் கொல்ல முயன்றதின் மூலம் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கே பிரபாகரன் களங்கம் ஏற்படுத்தி விட்டார். என டெலோ (TELO) இயக்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் கூறியதாவது:

தம்மை விடுதலைப் போராளிகள் எனக் கூறிக் கொள்ளும் புலித் தலைவர் வே. பிரபாகரன் தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் (டெலோ) சிறி சபா ரெத்தினத்தைக் கொலை செய்யும்படி தமது இயக்கத்தினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலைச் சதித் திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கையாக டெலோ போராளிகள் 4 பேர் கடத்திச் செல்லப்பட்டு பயங்கரமாக மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டுள்ளனர். பின்னர் சிறிசபாரெத்தினம் தங்கியிருந்த முகாமைத் தாக்கி அவரைக் கொல்ல முயற்சி செய்து தோல்வி அடைந்தனர்.

**சகஇயக்கங்களுடன் ஆதரவாக செயற்படும் டெலோ இயக்கத்தை சின்னாபின்னமாக்குவதுடன், ஈழ விடுதலைக்காகப் போராடும் மற்ற இயக்கங்களைச் சிறுமைப்படுத்தி, "புலிகள்" இயக்கம்தான் வலிமைமிக்கது என்பதைக் காட்ட வேண்டும் என்ற நோக்கம்தான் இத்தாக்குதலுக்கு காரணமாகும். பிரபாகரனின் இச்செயலானது போராட்ட வரலாற்றில் ஒரு கறைபடிந்த சம்பவமாகும். எனவும் அந்த அறிக்கை தெரிவித்தது.**

போராளிகட்கும் புலிகளுக்கும் ஏற்பட்ட இம் மோதலில், இரு தரப்பிலும் சுமார் 100 பேர்களுக்கு மேற்பட்டவர்களும் 25க்கு மேற்பட்ட அப்பாவி பொது மக்களும் பலியாகியுள்ளதாகத் தெரிய வருகிறது.



www.tamilarangam.net

## வரலாறு இவர்களைத் தண்டிக்கும்

### அரசியல் அறிவை குழிதோண்டிப்புதைக்கும் ஆயுத அராஜகம்

''தண்டனை.' என்பது குற்றவாளியின் முன் சுமத்தப்பட வேண்டியது. ஒப்புக்கொள்ளாவிட்டால் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் உண்மைகளை விளக்கி (உண்மையாயின்) மக்கள் முன் நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில் ஈழப்போராட்ட வரலாற்றில் இதுவரை எத்தனையோ ஆயுதப்போராட்ட இயக்கங்கள் தோன்றின! மறைந்தன! மங்குகின்றன! இன்னும் எத்தனையோ மலரும் என்பதுதான் நியதி! நிர்ப்பந்தம்! ஆனால் இதுவரை யாரும் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக யாராலும் தெரிவு செய்யப்படவில்லை. (ஒவ்வோர் இயக்கத்தைப்பற்றியும் மக்கள் பூரணமாக தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளும்வரை தெரிவு செய்யவும் முடியாது.)

இந்நிலையில் பொதுமக்கள் சம்பந்தமாகவோ, இயக்கங்கள் சம்பந்தமாகவோ யாரும் எடுத்த எடுப்பில் ''மரண தண்டனை'' விதிப்பது என்பதும், ஈழப்போராட்டத்தை தானே குத்தகை எடுத்து விட்டதாக நினைப்பதும் அரசியல் அறிவு அறவே பூச்சியமான நடவடிக்கை மட்டுமல்ல வரலாற்றைப் புரிந்து கொண்டது இவ்வளவு தான் என்பதை தாமாகவே பறைசாற்றிக்கொள்வதாகும்.

படுபாசிச ஜெயவர்த்தனா கூட பொதுமக்களைப் படுகொலை செய்யுமுன் ''பயங்கரவாதிகள்'' என்ற பட்டத்தையாவது சொல்லி விடுவான். பிரகடனப்படுத்தப்படாத யுத்தமும், திட்டமிட்ட வஞ்சகத் தனமான படுகொலைகளும் C I A இன் ஊடுருவல் கைக்கூலிகளுக்குத் தான் கைவந்த கலை. என்பதையும் ஊர் உலகம் அறியும். எனவே மக்களே மகத்தான சக்தி என்பவர்கள் யாரும் தம் இஷ்ட மரண தண்டனை நீதிபதிகளாக ஈழப்போராட்ட வரலாற்றை அசிங்கப் படுத்திய பெருமைக்குரியவர்களாக இருக்க மாட்டார்கள்.

---

## ஆரோக்கியமான அரசியல் வளர்ச்சியல்ல!

**—ஈரோஸ் கண்டனம்—**

ஃ டெலோ இயக்கத் தலைவர் சிறிசபாரத்தினத்தைக் கொல்ல முயற்சித்த புலிகள் அமைப்பு எத்தகைய காரணங்களைக் குறிப்பிட்டாலும்; இச்செயலை ஈழப் புரட்சி அமைப்பு (EROS) வன்மையாகக் கண்டிக்கிறது.

ஃ தனிநபர் கொலைகள் பிரச்சினைகளை வளர்க்கத் தான் உதவும். புலிகள் தமது தவறுகளை உணர்ந்து பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க முன்வரப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஃ இவ்வாறு தொடர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆரோக்கியமான அரசியல் வளர்ச்சிக்கு உதவாது. எனவும் ஈழப்புரட்சி அமைப்பு (EROS) பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டது.

சிறிய காரணத்தை முன்வைத்து சண்டையை வளர்த்து எமது இயக்கத்தை அழிக்க பிரபாகரன் குழுவினர் திட்டமிட்ட முறையில் செயற்பட்டுள்ளார்கள். ஆனால் இதற்காக நாம் அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கில்லை. எமது பொது எதிரி போராளிகளல்ல. சிறிலங்கா அரசே!




### தம்பிக்கு ஓர் கடிதம்

### ஈழத் தேசிய விடுதலை முன்னணி கண்டனம்!

எமது தாயக மீட்புப் போராட்டம் உக்கிரம் அடைந்த நிலையிலும், எமது இயக்கங்களின் முரண்பாடுகள் கூர்மையடைந்த வேளையிலும் தாங்களும் ஐக்கியம் வேண்டி ''ஈழத் தேசிய விடுதலை முன்னணி'' இல் தாமாகவே இணைந்து கொண்டீர்கள். ஆனால் தற்போது ஈழத் தேசிய விடுதலை முன்னணி'' உடன் தாங்கள் கொண்டுள்ள நிலைப்பாடுகள்பற்றி பரிசீலனை செய்யும்படி எமது மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்!

தற்போது நிலவும் அரசியல் மாற்றங்கள் பற்றியும், எமது கூட்டு வேலைத் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடுவதற்கும், கருத்துப் பரிமாறல்களுக்கும் தங்களுக்கும் பல கட்ட அழைப்புக்கள் விடுத்திருந்தோம். (குறிப்பாக ஏப்ரல் 10, 13, 16 திகதிகளில்) ஆனால் தாங்கள் கலந்து கொள்ளவில்லை! நாம் தங்களுக்கு எழுத்து மூலமாக ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளரினூடாக 17-10-86 மு. ப. 10 மணிக்கு கூட்ட அழைப்பு விடுத்திருந்தோம்! ஆனால் இதுவரை தாங்கள் எதுவித தகவல்களும் கூறாததுடன் கூட்டங்களுக்கு சமூகம் அளிக்காமலும், பொருட்படுத்தாமலும் இருப்பது வருந்தத்தக்கது!

நாம் ஈழ மக்களின் விடிவுக்காக ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொடர்ந்து விடுத்த அழைப்பை பொருட்படுத்தாத போதும்; ஐக்கியத்தை வலியுறுத்தி தொடர்ந்தும் நாங்கள் அழைப்புக்கள் விடுத்ததை எங்கள் பலவீனங்கள் என்று நீங்கள் புரிந்து கொள்வீர்களானால் அது மிகவும் தவறாகும்!

தங்களுடைய நிலைப்பாடுகள் இவ்வாறாகத் தொடர்ந்தும் நீடிப்பின்: ஈழ தேசத்தின் நலனையும், தமிழ் மக்களின் சுபிட்சமான வாழ்வையும் முன்னிட்டு எமது மக்களின் விடிவுக்காக உண்மையான ஐக்கியத்தை கருத்திற்கொண்டு சில முடிவுகளை நாம் மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம்! தொடர்ச்சியான எங்கள் அழைப்பை தாங்கள் பொருட்படுத்தாமையினாலேயே இறுதியாக இந்நிலைக்குத் தள்ளப்பட்டோம்!

தாங்கள் விசுவாசமாக ஐக்கியத்தையும் ஈழப் போராட்டத்தையும் நேசிப்பீர்களேயானால் ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடன் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டிய காலத்தின் கட்டாயத் தேவையை உணர்ந்து கொள்வீர்கள் என கருதுகின்றோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# CIA இன் சித்துவிளையாட்டு

**"தன் கையாலேயே தன் கண்ணைக் குத்தவைக்கும்!''**

**ஈழப் போராட்டத்தை பின் தள்ள வைக்கும் கைக்கூலிகளின் ஊடுருவல்!**

கவச வண்டிகளின் வரிசைகளினாலும், கட்டவிழ்க்கப்பட்ட இராணுவ காட்டுமிராண்டித்தனங்களினாலும் மூக்குடைபட்டுப் போன சிறிலங்கா அரசு கண் மூடித்தனமாக விமானத் தாக்குதலை மேற்கொண்டது. இதன் மூலமும் அடக்கியாள முடியாது போனது மட்டுமல்லாமல் மாறாக சர்வதேச ரீதியான அவமானத்தை வாரிக் கொண்டது. அத்துடன் 'ஈழத்தின் ஒரு பகுதி விடுதலை செய்யப்பட்ட பிரதேசமாகவும் ஆக்கப்படும் என அஞ்சுகிறது.

சம்பள உயர்வு, பாதுகாப்பு, உயிர் உத்தரவாதம், விடுப்பு போன்றவை தொடர்பாகவும் கூலிப் பட்டாளத்துள் உள்ளூர முரண்பாடுகள் ஊசலாடுகின்றன. இராணுவ உயர்மட்டங்களிலிருந்தும் ஜே. ஆருக்கு எதிரான சதி வளர்ந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் முப்படையினர்களுக்குமிடையில் முரண்பாடுகள் முத்திப் போய் இராணுவ கட்டுப்பாடுகள் தளர்ந்திடும் நிலையில் உள்ளத்தோடு பொருளாதார ரீதியாகவும் படுகுழியுள் வீழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இராணுவ ரீதியாக ஆயுத பலத்தினால் அடக்கி ஒடுக்கிவிட முடியாத ஜெயவர்த்தனா பாக்கிஸ்தான், மொசாட், S.A.S., K.M.S. போன்ற ஆலோசனைக் கூலிக்கும்பல்களின் பக்கபல உதவிகளோடு தனது மூல தந்த்ரோபாயத்தை முற்று முழுதாகவே வேறு திசையில் மாற்றியுள்ளான்.

ஊடுருவில் முறையில் கைதேர்ந்த CIA இன் உதவியோடு இயக்கங்களிடையே ஊடுருவி ''தன்கையாலேயே தன் கண்ணைக் குத்த வைக்கும்'' அநாகரீகமான நடவடிக்கைகட்குத் தூபம் இடுகின்றது. எங்கோ ஓர் மூலையில் ஊடுருவி உள்ளூர விஸ்வரூபமெடுக்கும் CIA இன் சில்லறைத் தனங்களுக்கும், சுயநல சுகபோக நப்பாசைகட்கும் அடிமையாகும் பெரிய மனிதர்களே இதற்கு உடந்தையாக தங்களையுமறியாது மகுடி முன் நாகம் ஆகிவிடுகின்றனர்.

''டாலர்'' வலைக்குள் வீழும் இந்த ''பாலர்''கள்; ''பண்டிதர்'' வேடத்தில் தாமும் அறியாத ஓர் சக்தியால் ஆட்டிவைக்கப்படுகின்றனர். CIA ஊடுருவி இருப்பதால் பிரச்சாரப் புரட்டல்களிலும் முந்திக் கொள்கின்றனர்.

ஈழப் போராட்டத்தை அடக்கிவிட முடியாத சிறிலங்கா அரசு புரட்சியைப் பின் தள்ளிவிடுதலில் பெரும் இலாபம் உண்டு. அப்படிப் பின் தள்ளிவிட முனைந்து கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில்; ''நானே சகல கலா வல்லவன்'' எனத் தம்பட்டம் அடிப்பவர்களைத் தம் வட்டத்துள் கொண்டு வந்து விடுகிறது.

எனவே ஈழப் பிரதேசத்தை விடுதலை செய்யுமுன் ''ஈழப்போராட்டத்தை'' முதலில் சி.ஐ.ஏ. இன் கைகளில் சிக்க வைக்காது பாதுகாக்க வேண்டியது அராஜகம் தவிர்ந்த அரசியல் பாதையில் செல்லும் அனைத்து முற்போக்கு முன்னணி இயக்கங்களினதும் பாரிய கடமையாகும்.

## மக்கள் எழுச்சியை மழுங்கடிக்கும் நடவடிக்கை!

**புனிதமான பாதையில் கறைபடிந்த அத்தியாயம்!**

—PLOT அறிக்கை—

அரசியல் முரண்பாடுகளை இராணுவ மேலாதிக்கத்தினூடாக தீர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப் போராட்டத்தை வலிமையான போராட்டமாக முன்னெடுப்பதற்கு இயக்கங்களின் ஒற்றுமையும், மக்களின் உணர்வு பூர்வமான ஒத்துழைப்பும் தேவை.

விடுதலைப் போராளிகளையும், பொதுமக்களையும், TELO இயக்கத் தலைவர் சிறி சபாரத்தினத்தையும் படுகொலை செய்த திட்டமிட்ட சதியை வன்மையாக கண்டிக்கின்றோம். பிரபாகரன் கூறும் எக்காரணமாயினும் அதை அவர்கள் அணுகிய முறையும் கையாண்ட வழிமுறைகளும் மிகமிக கொடூரமானவையும், அராஜகமானவையுமாகும். விடுதலைக்காக வாழ்வைத் தியாகம் பண்ணி களம் வந்த இளைஞர்களை இவ்வாறு அழிப்பது மக்கள் எதிரிக்கு எதிராக கொதித்து எழும் தன்மையை மழுங்கடிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைஞர் கண்ணீர் கடிதம்

**சாமர்த்தியசாலிகள் "சகுனி" வேலையில்**
**வெற்றி பெற்று விட்டார்கள்!**
**ஒற்றுமையைச் சிலர் மீறிவிட்டார்கள்!**
**பிரித்தாளும் சக்திக்கு நடை பாவாடை**
**விரிக்கப்பட்டு விட்டது!**

● தமிழ் ஈழ விடுதலை இயக்க (டெலோ) தலைவர் சிறிசபா ரெத்தினம் ஆற்றமிகு தலைவனாக செயற்பட்டார்!

● எதிரியைத் தடுத்திட எடுத்திட வேண்டிய ஆயுதங்கள் இனத்தின் இரத்தத்தையே குடித்து மகிழத் தொடங்கிவிட்டது!

● ஈழ விடுதலை எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதைப் புரியாத குழுக்கள் ஒருவரை இருவர் மாய்த்துக்கொள்ளும் அவலம் ஆரம்பமாகி விட்டது!

● எதிரிகளை மறந்துவிட்டு தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்ள 'குரு சேத்திரம்'' அமைத்து விட்டார்கள்.

● போராளிகள் குழு ஒன்றின் தலைவனையே சுட்டுக் கொல்லத் துணிந்துவிட்ட ''சகுனி'' இன் சூழ்ச்சி பலித்துவிட்டது.

● ஆடுகள் முட்டிக்கொள்ள வழியும் இரத்தத்தை நரிகள் குடித்து மகிழ்ந்த கதைபோல்; படித்தவற்றை மறந்தவர்களை எண்ணிப் பதைத்துப் போகிறோம்! விரக்தி அடைகிறோம்.

● பகைவனைச் சிதறடித்து மக்களைப் பாதுகாத்திடப் பயன்பட வேண்டிய ஆயுதம்; பற்றோடும் பாசத்தோடும் ஒரே பாசறையில் ஒரே குறிக்கோளுக்காகப் பயிற்சி பெற்றவர்களின் உயிர்களையே குடித்திட எழுந்துவிட்டது.

● TELO, EPRLF, EROS ஆகியன முதலில் ஒன்று சேர்ந்த போது நான் பூரித்தேன். சிறுதுகாலத்தின் பின் அதில் பிரபாகரன் குழுவும் இணைந்து கொண்டதாக ஏடுகளில் கண்டபோது இன்பவாரியில் திளைத்தேன். நான் மட்டுமா? கட்சி சார்பற்றுப் பலரும் களிபேருவகை கொண்டனர்.

● ஒற்றுமையுடன் செயற்படுவதாக உறுதிமொழி அளித்தார்கள்; இது வெறும் உதட்டு உச்சரிப்பா என கெஞ்சிக் குறையாகக் கேட்டுக் கொண்டேன் ஆனால் மீறிவிட்டார்கள். எல்லோருமல்ல! சிலர் மீறிவிட்டார்கள்.

● ஒற்றுமை நீடிக்கவில்லை. யாரோ சாமர்த்திய சாலிகள் ''சகுனி'' வேலையில் இறங்கி வெற்றி பெற்றுவிட்டார்கள், இந்த பிரித்தாளும் சக்திக்கு விடுதலைப் போராளிகள் பாசறையில் எப்படியோ நடை பாவாடை விரிக்கப்பட்டுவிட்டது.

உடன்பிறப்பே!

சிறிரங்கப்பட்டினத்து திப்பு சுல்தானின் ஞாபகமே வருகிறது,

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு!

தாங்கிக்கொள்ள முடியவில்லையே தவிக்கிறேன்!

## அராஜகத்திற்கு எதிராக மக்கள் அணி!

**தேசத்துப் பகைவர்களை எதிர்த்துஈழத்து தெருக்களிலே...**

மே 09 : யாழ்ப்பாணம்—புலி பிரபாகரனால் படுகொலை செய்யப் பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஈழப் போராளிகட்கும்; பொதுமக்களுக்கும்; TELO இயக்கத் தலைவர் சிறி சபாரெத்தினத்திற்கும் அஞ்சலி செலுத்துமுகமாகவும்; இத்திட்ட மிட்ட வஞ்சகத்தனமான படுகொலை களைக் கண்டித்தும் மாபெரும் மௌன ஊர்வலமும், பூரணகர்த் தாலும் அனுஷ்டிக்கப் பட்டது. கடைகள், பாடசாலைகள், அலுவல கங்கள் மூடப்பட்டிருந்தன. வாக னங்கள் ஓடவில்லை.

வாழைமரங்களும், தோரணங் களும் கட்டப்பட்டு வீதிவீதியாக சிறிசபாரெத்னத்தின் புகைப்படங் களும் வைக்கப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

கண்மூடித்தனமும், மிருகத் தனமும் மிக்கதான இவ் ஆயுத அராஜகத்தை எதிர்த்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடத்திய இவ்வூர்வலம் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலிருந்து ஆரம்பமாகி சுதுமலை தாவடியினூ டாக கோண்டாவிலை அடைந்து கொக்குவில் ஊடாக யாழ் நகரைச் சென்றடைந்தது. மிகக் குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வூர்வலத்திற்கு மக்கள் மத்தியி லிருந்மி பூரண ஆதரவு கிடைத்தது.

**ஆயுத அராஜகத்திற்கு—மக்கள் அடிபணிந்த வரலாறு இல்லை!**



www.tamilarangam.net

### உடல்கள் மட்டுமல்ல உயிர் வாழ்ந்த மண்ணும் சல்லடை

மார்ச் 08: திருகோணமலை— இறப்புகண்டி என்னும் இடத்தில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் இராணுவ முகாமிலிருந்து புறப்படும் இராணுவத்தினரின் கொள்ளை, சூறையாடலுக்கு அஞ்சி அப்பகுதியிலுள்ள தமிழ் மக்கள் தங்கள் பொருள்கள், பணம், தங்க நகைகள் என்பவற்றை நிலத்துள் புதைத்து வைத்துள்ளனர். இதையறிந்த இராணுவத்தினர் இப்போது அந்தந்த வீட்டிலுள்ளவர்களைக் கொண்டே நிலத்தைத் தோண்டிப்பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

கடற்பாறை, மண்வெட்டி, துப்பாக்கி சகிதம் ரக் வண்டிகளில் வந்திறங்கும் இராணுவத்தினர் தாம் குறிப்பிடும் இடங்களைத் தோண்டுமாறு துப்பாக்கியால் அடிக்கின்றனர். புதைக்கப்பட்ட இடங்களைக் காட்ட மறுப்பவர்களை அல்லது எதுவும் இல்லை என்பவர்களை அந்த இடத்திலேயே சுட்டுக்கொல்கின்றனர். சில வீடுகள் ஆறு அடி ஆழத்திற்கு கூட குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

### வீட்டுக் கதவுகளைத் தட்டித் திறந்து சுட்டுக் கொன்றனர்,

மார்ச் 21: வவுனியா—கென்பாம், டொலர்பாம் இராணுவ முகாம்களிலிருந்து புறப்பட்ட கொலை வெறியர்கள் சுமார் 350 பேர் நெடுங்கேணியைச் சுற்றி வளைத்தனர். பல ஜீப் வண்டிகளிலும் 2 கவச வண்டிகளிலும் 7 உழவு இயந்திரங்களிலும் விவசாயிகள் போல் வேடமிட்டுவந்து இவர்கள் ஒவ்வொரு வீடுகளையும் தட்டித் திறந்து சரமாரியாகச் சுட்டுத் தள்ளினர். இரவீந்திரன் கமலகுமாரி (25), பொன்னம்பலம் குருபரம் (30), இவரின் தம்பி (23), பெருமாள் சிறிரங்கன் (3!), எ. நேருலதா (45), கிருஷ்ணலிங்கம் (55). பி. செல்லத்துரை (35), ஆறுமுகம் (23), காளிக்குட்டி என்னும் அடையாளம் காணப்பட்டவர்கள் உட்பட 23 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்பகுதியில் போராளி ஒருவர் மறைந்துள்ளதாகக் கிடைத்த ஓர் இரகசியத் தகவலையடுத்தே எச்சரிக்கை நடவடிக்கையாக இது நடந்தது என மக்கள் தெரிவித்தனர்.

### உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த தொடரும்... விவசாயிகள் படுகொலை! சிறிலங்கா அரசின் உத்தியோக பூர்வ நடவடிக்கை!

மார்ச் 19: முரசு மோட்டை 3ம் கட்டையில் சூடு மிதித்துக் கொண்டிருந்த விவசாயிகளை இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்டனர். இராணுவத்தினரின் வருகையை அவர்கள் எதிர்பார்த்திருந்ததினால் பலர் ஓடிவிட்டனர். ஓட ஓட சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிரோடு சிலர் கைது செய்யப்பட்டனர். கொடூரமான வதைகளுக்குப்பின் அவர்களின் கைகள் கட்டப்பட்டு ரக் வண்டிகளில் ஏற்றப்பட்டனர். வரும்போது வீதியில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு குழந்தை உட்பட இரு பெண்கள் காயம்.

### பலவந்தமாகப் பாதுகாப்பு வலையம் பிரகடனம்! ''புள்டோசர்'' களினால் வீடுகள் தரைமட்டம்!

மார்ச் 30: பலாலி—இராணுவ முகாமிலிருந்து வந்திறங்கிய 100க்கும் மேற்பட்ட ''கறுப்பு உடை கூலிக்கொலைப் பட்டாளங்கள்'' கட்டுவன் பகுதியில் உள்ள பல இலட்சம் பெறுமதிமிக்க அரிசி ஆலை ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தினர் அதை அண்மித்திருந்த வீடுகளையும் கடைகளையும் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அடித்து நொறுக்கத் தொடங்கினார்கள். விலையுயர்ந்த பொருள்களை அள்ளி ரக் வண்டிகளில் போட்டனர். இன்னொரு கூட்டத்தினர் வரிசையாகப் பெற்றோல் ஊற்றிக்கொண்டு செல்ல மறு பகுதியினர் தீவைத்துக் கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து அங்கு வந்து குவிந்த ஆயுதப்படையினர், மீதி வீடுகளுக்கு தீ வைத்தனர். ''புள்டோசர்'' களினால் மக்கள் வெளியேறிய வீடுகளை இடித்து தரைமட்டமாக்கினர். அப்பகுதி முழுக்கப் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. பாதுகாப்பு வலையக் குடியகற்றுத் திட்டத்தைப் பலவந்தமாக நிறைவேற்றத் தொடங்கியிருப்பதின் எதிரொலியே இதுவாகும்.

### விவசாயிகள்போல் வேடமிட்டு. விளை நிலங்களைக் கொழுத்தினர்

மார்ச் 31: கிளிநொச்சி—ஜெயந்திபுரம் 8ம் கட்டைப்பகுதிக்கு தமிழ் விவசாயிகள் போல் வேடமிட்டு வந்திறங்கிய ''விசேட கொலைப் பயிற்சிக் கும்பல்'' ஒன்று சாதாரண மக்களைப் போல வயல்களுக்குள் நுழைந்தது. ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பிரிந்து சென்று வெளியேறிய சற்று நேரத்திற்கெல்லாம் ஆங்காங்கே வயல்கள் தீப்பற்றி எரிய ஆரம்பித்தன.

இவர்களே இரவு நேரங்களில் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு வீட்டுக் கதவுகளைத் தட்டித் திறந்து அட்டகாசம்புரிவதோடு, பெண்களை மானபங்கப்படுத்தவும் முற்படுகின்றனர். நகைகளை அறுத்தெடுப்பதுடன் ஆயுதங்களை காட்டி மிரட்டி, இருக்கும் பணங்களையும் சுருட்டுகின்றனர். தேவையான பொருட்களையும் எடுத்துச் செல்கின்றனர். தாங்கள் ''தமிழ் போராளிகள்'' எனக் கூறுமாறும் சொல்விட்டுச் செல்கின்றனர்.

### பிரித்து ஆண்ட பிரிட்டிஷ் உதவி!

பலாலி விமான நிலையம் முப்படைத்தளமாக மாற்றப்படுவது மட்டுமல்லாமல் ''பிரிட்டிஷ்'' உதவியுடன் சர்வதேச விமான நிலையமாகவும் மாற்றப்படவுள்ளது. இதற்காக விமான ஓடுபாதை விஸ்தரிக்கப்படும் நோக்கத்துடன் மையிலிட்டி கடற்கரைவரை ஏராளமான காணிகளை அரசு பலவந்தமாகச் சுவீகரித்துள்ளது.

www.tamilarangam.net

# “மொசாட்” மூளை அசிட் மழை!

இதுவரை விமானத்தாக்குதலை கண்மூடித்தனமாக மேற்கொண்டுவரும் சிறிலங்கா நவபாசிச அரசு, இப்போது அதனுடன் சேர்த்து மிகக் கொடூரமான, மனிதாபிமானமற்ற, மிகக் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. சத்தமின்றி செல்லக்கூடிய நவீன யுத்த விமானங்களில் வந்து மக்கள் குடியிருப்புக்களையும், சன நடமாட்டம் செறிந்துள்ள இடங்களையும் பார்த்து ஒருவித ‘‘அசிட்’’ திராவகத்தை வீசத் தொடங்கியுள்ளது.

**ஏப்ரல் 02 :** கீரிமலைப் பகுதியில் வீடுகளை நோக்கியும், சன நடமாட்டம் அதிகமாக காணப்பட்ட வீதிகளையும் நோக்கி யுத்த விமானமொன்று ‘‘அசிட்’’ போன்ற ஒருவித திராவகத்தை வீசத் தொடங்கியது. முகம் கருக்கப் பட்ட நிலையில் ஒருவர் அவ்விடத்திலேயே சுருண்டு விழுந்து மரணமானார். உடம்பு முழுவதும் ‘‘அசிட்’’ இனால் தோயப்பட்டு அலறியடித்துக் கொண்டு ஓடிய மற்றொருவர் ஹெலிகாப்டரிலிருந்து சுட்டுக் கொல்லப் பட்டார். கைக்குழந்தையுடன், ஒரு சிறுமியும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். கண்களில் ‘அசிட்’ பட்டதினால் சிலர் பார்வை இழந்துள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

**ஏப்ரல் 05 :** பலாலி—இராணுவ முகாமைச் சுற்றியுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி இரு ஹெலிகாப்டர்கள் குண்டு வீச்சு நடத்தியதுடன் ஒருவித திராவகத்தையும் வீசியது. வினோத்குமார் (22), ராஜன் (23), என்பவர்கள் உட்பட 5 பேரின் உடல் கோரமான முறையில் சிதைக்கப்பட்டுள்ளன.

குண்டுவீசித் தாக்கும்போது ஏற்படும் சத்தங்களிலிருந்து மக்கள் பாதுகாப்பிடங்களைத் தேடிக் கொள்வதைத் தடுக்கும் முகமாகவும், மக்களைக் கொல்வதோடு அவர்களின் உடல்களை ‘அசிட்’ இனால் சிதைத்து கோர உருவங்களாக மாற்றி ஆத்திரமூட்டச் செய்யும் நடவடிக்கைகளுக்குமாகவே, ‘‘மொசாட்’’டின் ஆலோசனைக் கிணங்க ஜெயவர்த்தனா இப்புதிய கொலைத் திட்டத்தைத் தீட்டியுள்ளான்.

---

## ஒன்றுபட்டு உரிமைக்காகப் போராடுவோம்!

- இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் எவ்வித குழப்பங்களும் இருக்க கூடாது!
- தமிழ் மக்கள் இனி ஏமாந்து போகக் கூடாது!
- அவர்களும் எம்மைப்போன்ற சிறுபான்மை யினரே!
- அவர்களைக் காப்பாற்றுவது எமது முஸ் லீம் மக்களின் கடமை!
- எம்மைக் காப்பாற்றுவது அவர்களின் கடமை!

என முஸ்லீம் சிறிலங்கா காங்கிரசில் குடியரசு சார் புள்ள வைபவமொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னை நாள் கல்வி மந்திரி பதியுதீன் முகமட் குறிப்பிட்டார். தொடர்ந்து திரு. அப்துல் மஜீத் பேசு கையில்... எமது மொழியும் தமிழே! எனவே ஒன்றுபட்டு உரிமைக்காகப் போராட வேண்டியது எமது கடமை! வடக்கு கிழக்கிற்குச் செல்வது வெளிநாட்டுக்குச் செல் வதுபோல் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## இனவெறியைத் தூண்டும் இராணுவ சதி! “காவல்படை” போர்வையில் ஏவல் நாய்கள்!

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களையும், முஸ்லீம் மக்களையும் தூண்டி இனக்கலவரங்களை ஏற்படுத்தும் முகமாக முஸ்லீம், சிங்கள மக்கள் மத்தியி லிருந்து ‘‘ஊர்காவல் படை’’ என்ற போர்வையில் ஆயுதப் பயிற்சிகளையும், ஆயுதங்களையும் சிறிலங்கா அரசு கொடுத்து வருவது. தெரிந்ததே!

மூதூர் பகுதியில் வீடுகளில் சூறையாடல் சம்பந்த மான போட்டியில் கடந்த 20 திகதி இராணுவத்தி னருக்கும், ஊர்காவல் படைக் காடையர்களுக்கும் பெரும் மோதல் ஏற்பட்டது. இதில் ஊர்காவல் படைத் தலைவர் அன்சாரி, என்பவர் உட்பட 7 பேர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருவர் கவலைக்கிடம். பலர் படுகாயமடைந்தனர். இராணுவத் தினர் தரப்பிலும் பலர் காயம் அடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

### அமெரிக்க ஆக்கிரமிப்புச் சுவடுகள் !

இளவாலை, கீரிமலை, அளவெட்டி, சேந்தான் குளம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் நடத் தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் கண்டெடுக்கப்பட்ட பாகங்களில் ‘17 AMERICA 1985 (M 18) GMM’’ என்ற குறியீடுகள் காணப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறிலங்கா அரசின் பாரம்பரிய நடவடிக்கைகள் தொடர்கின்றன!**

**திருகோணமலையில் திட்டமிட்ட குடியேற்றம் தொடர்கிறது**

**சிங்கள மக்களைச் செறிவுள்ளவர்களாக்கி இன வெறியூட்டும் சிறிலங்கா அரசு:**

திருகோணமலை திரியாய் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஏராளமான தமிழ் மக்கள் அயல் கிராமங்களான சாம்பல் தீவு, நிலாவெளி, கும்புறுப்பிட்டி, என்னுமிடங்களுக்கு குடிபெயர்ந்த வண்ணம் உள்ளனர். எங்கு போவதென்றே தெரியாமல் சிலர் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

முகாமைச் சுற்றி 10 மைல் சுற்றளவிற்கு இராணுவ ரோந்துகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ரோந்து வரும் சமயம் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், வீதியில் வருவோர் போவோர் மீது வாகனங்களினுல் மோதியும், துப்பாக்கிகளினால் அடித்தும் இராணுவ அட்டகாசம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

இன்னும் கொஞ்ச நாட்களில் தமிழர்கள் எல்லோரும் இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும். இல்லையேல் சுட்டுக் கொன்றுவிடுவோம் என்று கொச்சைத் தமிழில் மிரட்டுகின்றனர். தமிழர்கள் வெளியேற்றப்பட்ட இடங்களில் சிங்களவர்கள் லொறிகளிலும் ஏற்றப்பட்டு வந்து விரும்பியோ விரும்பாமலோ பலவந்தமாகக் குடியமர்த்தப்படுகின்றனர். இதன் தொடர்ச்சியாக 9ம் திகதி 21 லொறிகளில் சிங்கள மக்கள் ஏற்றிவரப்பட்டு வெளியேற்றப்பட்ட தமிழர்கள் வீடுகளில் குடியேற்றப்பட்டனர். குடியமர்த்தப்பட்டவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன.

இவர்கள் எஞ்சியுள்ள தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கைகளில் ஆயுதம் சகிதம் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு சிறிலங்கா அரசினால் மாத சம்பளங்களோடு, உணவுப் பொருள்களும் வாராவாரம் வழங்கப் படுகின்றது. இவர்கள் வயல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைத் துரத்திவிட்டு அவர்களின் வயல்களை அறுவடை செய்து மூட்டையாக கட்டிக் கொண்டும் சென்றுள்ளனர். குடியேற்றப்படும் சிங்களவர்கட்கு ஆயுதப்பயிற்சியோடு ஆயுதங்களும் இராணுவத்தினரால் வழங்கப்படுகின்றன.

## கிராமிய தொழிலாளர் விவசாய முன்னனி - ஆர்ப்பாட்டம்!

**ஒன்றுபட்ட உழைப்பாளர்களின் ஓங்கும் போராட்டம்!**

**சிறிலங்காவின் சதிக்கெதிராக அணி திரள்வோம்!**

அக்கரைப்பற்று, தங்கவேலாயுதபுரம், அம்பாறை பகுதிகளிலும் ஏனைய ஈழப் பிரதேசங்களிலும் விவசாயத்தைப் பூண்டோடு அழித்தொழிக்கும் "சிறிலங்கா மொசாட்" கூட்டுச் சதியை எதிர்த்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுசனப் பிரிவான "கிராமிய தொழிலாளர்கள் விடுதலை முன்னணி" ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது. ஆயிரத்திற்கும் அதிக மானோர் இதில் கலந்து கொண்ட இப்போராட்டமானது விவசாயிகள் மத்தியில் உருவான எழுச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியது. அக்கரைப்பற்று தங்கவேலாயுதபுர விவசாயிகள் படுகொலை தொடர்பாக மக்களின் கண்டன நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இது இடம் பெற்றது.

போராளிகட்கு உணவுத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தவும், மக்களைப் பட்டினியால் வாடவைத்து அரசிடம் உணவுக்காக கையேந்தவைப்பதற்குமாக; ஈழ தேசமெங்கும் கூட்டங் கூட்டமாக விவசாயிகளைச் சுட்டுக் கொன்றும், நெல் மூட்டைகளைக் கொள்ளையடித்தும், எரித்தும் புதிய "இரட்டைக் கொலைத் திட்டத்தை" சிறிலங்கா நவபாசிச அரசு அமுல்படுத்திக்கொண்டிருப்பது தெரிந்ததே!

**கடல் தொழிலாளர்களின் எழுச்சி ! மக்கள் போராட்டம் மலர்கிறது !**

சிறிலங்கா பேரினவாத அரசின் கடற் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் அன்றாடம் பாதிக்கப்பட்டு வரும் கடல் தொழிலாளர்கள் அரசின் அடக்குமுறைகளையும், கொடுமைகளையும் எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். நவாந்துரை என்னுமிடத்தில் ஆரம்பமாகி கொழும்புத் துறையில் முடிவடைந்த இவ் ஊர்வலத்தில் பெருந் தொகையாகப் பெண்களும், மாணவர்களும், கலந்து கொண்டனர். இதற்கு முழு ஆதரவு தெரிவித்து அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன. இதை குருநகர் மீனவர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

**பேச்சு வார்த்தைக்கு இடமில்லை !**

பேச்சு வார்த்தை நடவடிக்கைகளைப் பற்றி எதுவும் சிந்திக்க வேண்டாமெனவும்; தாக்குதல் தீவிரப்படுத்தல் பற்றி எவ்வித மாற்றமும் இல்லை எனவும்; தனக்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளது என இராணுவ தளபதி ஜெனரல் சிறி ரணதுங்க கொழும்பில் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளான்.

**ஒரு தேசிய இனத் தீர்வின் புதிய வடிவங்கள்!**

விமானத் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படும், இந்தியா என்ன சொல்வதைப்பற்றியும் எமக்குக் கவலையில்லை, தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என்று; பாதுகாப்பு மந்திரி லலித் அத்துலத் முதலி கொழும்பில் ஓர் இரகசியக் கூட்ட மொன்றில் தெரிவித்துள்ளான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### விவசாய திணைக்களம்! வெறியர்களின் வேட்டைக் களமானது!

ஏப்ரல் 01 : பரந்தன் — முரசுமோட்டைப் பகுதிக்கு 5 லொறிகளிலும், 3 ஜீப் வண்டிகளிலும், ஒரு வேனிலும் வந்த இராணுவத்தினர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். பின்னர் அவர்கள் விவசாய திணைக்களத்திற்குச் சென்றபோது அங்கிருந்த காவலாளி உயிர் தப்பி ஓடி விட்டார். சுமார் 550 நெல் மூட்டைகளை லொறிகளில் ஏற்றிவிட்டு எஞ்சிய நெல் மூட்டைகளுக்கும், மூட்டை கட்டப்படாமலிருந்த நெற்குவியல்களுக்கும் தீவைத்தனர். கண்ணாடி சன்னல்களை சரமாரியாகச் சுட்டு உடைத்துச் சிதற வைத்தனர். பின் கட்டிடங்களுக்கு "டைம்பாம்" வைத்துவிட்டு சென்று விட்டனர்.

### இளம் டாக்டர் கோரக் கொலை!

ஏப்ரல் 06 : கிளிநொச்சி—திருநகர் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்திய இராணுவத்தினர் கிறிஸ்ரொபர் (26) என்னும் இளம் டாக்டர் ஒருவரை தட்டான்குளம் என்னுமிடத்திற்கு அழைத்துச் சென்று நிர்வாணமாக்கி துப்பாக்கியின் "வயனெட்" இனால் முகம், உடல் எங்கும் கீறிக் கிழித்து அதில் மிளகாய்ப் பொடியை தூவி சித்திரவதை செய்து உருத்தெரியாத வரையில் குரூரமான முறையில் கொலை செய்துள்ளனர். போராளிகளுக்கு இந்த டாக்டர் உதவி செய்ததாகக் கிடைத்த தகவலையடுத்தே இவ்விதம் இராணுவத்தினரால் கோரக் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

### B. B. C. நிருபர் மயிரிழையில் உயிர்பிழைப்பு

ஏப்ரல் 07 : யாழ்— "அசோக் ஹொட்டேல்" இல் தங்கியிருந்த B. B. C. நிருபர் "ஹம்றி ஹக்லி" கோட்டையிலிருந்து இராணுவத்தினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் தாம் மயிரிழையில் உயிர் பிழைத்ததாகக் குறிப்பிட்டார். இராணுவத்தினரின் பீரங்கி குண்டுவீச்சுத் தாக்குதலில் தாம் தங்கியிருந்த பகுதி பலத்த சேதமடைந்து விட்டதாகவும் குறிப்பிட்டார். தாக்குதல் நடைபெற்றிருந்த சமயம் தாம் வைத்தியசாலையில்இருந்ததால் உயிர் தப்பிக் கொண்டதாகக் கவலையுடன் தெரிவித்தார்.

### கப்பல் படையினரின் காடைத்தனம்! மீனவர் படகுகள் மூழ்கடிப்பு!

ஏப்ரல் 07 : வல்வெட்டித் துறை— பீரங்கிப் படகுகளில் வந்த கப்பல் படையினர் அப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினர். குண்டுகளால் துளையிடப்பட்ட அவர்களது பிளாஸ்டிக் படகுகள் மூழ்கத் தொடங்கின. காயங்களுடன் மீனவர்கள் கடலில் குதித்து விட்டனர். மூழ்கடிக்கப்படாத படகுகளிலிருந்து மீனவர்கள் பிடித்த மீன் இறால் போன்றவற்றை அள்ளி தமது படகுகளில் போட்டுவிட்டு அந்தப்படகுகளையும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மூழ்கடித்தனர். விஜயகமூர்த்தி(50), பெரியதம்பி(38) முரளி (26), பாமு (39), ராஜி(35), சோமு (30) புத்திரசிகாமணி (35) ஆகியோர்மட்டுமே காயங்களுடன் கரை சேர்ந்தனர்.

## உலக அரங்கில் சிறிலங்கா தலைகுனிவு!

### ஐக்கிய நாடுகள் சபையில் அம்பலம்! மனித உரிமைக்குழு கண்டனம்! வெளியுறவுக் கொள்கையிலும் இனவெறி ஆதிக்கம்!

வர்த்தகம் மற்றும் விளையாட்டு உறவுகளை இனவெறி பிடித்த தென்னாபிரிக்க அரசுடன் வைத்துக் கொண்டு அதனுடன் கூட்டுச் சேர்ந்த சிறிலங்கா அரசின் அநாகரீகமான வெளியுறவுக் கொள்கை வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும். தார்மீக அடிப்படையில் ஏன் துண்டிக்கவில்லை.

**—பல்கேரியா பிரதிநிதி**

சிறிலங்கா இராணுவம் கட்டுப்பாடு அற்ற ஒழுங்கீனமானவர்கள்,

**—இங்கிலாந்து பிரதிநிதி**

போராளிகட்கு மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்கிறீர்களே அப்படியாயின் எப்படிப் போராளிகள்மக்கள் மத்தியில் நிலைத்திருக்க முடியும்! மக்களின் உதவிகளுடனும், ஆதரவுகளுடனும்தான் இராணுவத்தைத்தாக்க முடியும்!

**—அர்ஜென்டீனா பிரதிநிதி**

வெளியுறவுக் கொள்கையிலும் இனவெறி மண்டிக் கிடக்கின்றது. என 18 நாடுகள் கலந்து கொண்ட ஐ. நா. விவாதத்தில் சிறிலங்கா அரசின் அழுக்குப் பிடித்த அரசியல் கொள்கைகளையும், இனவெறிக் குணாம்சங்களையும் தோலுரித்துக் காட்டின.

### தமிழர்களின் பாரம்பரிய சின்னங்களின் சிதைப்பு! வரலாற்றுத் தடயங்களின் அழித்தொழிப்பு!

### முக்கியத்துவம் வாய்ந்த திருத்தலத்தின் மூலஸ்தானம் மூர்க்கர்களின் கையில்!

பொதுமக்களின் வழிபாட்டுத் தலங்களிலும் இதுவரை சிறிலங்கா அரசு தன் இனவெறி கோரத் தாண்டவங்களைக் காட்டியுள்ளது. இனக் கலவரம் என்ற போர்வையில் சிறிலங்கா இராணுவம் இடித்துத் தள்ளிய ஆலயங்கள் எண்ணிலடங்கா! ஈழத்தின் பழம்பெரும் முத்தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரர் ஆலய மூலஸ்தானத்திலிருந்து விலைமதிப்பற்ற விக்கிரகங்கள் இராணுவத்தினரின் உதவியோடு வந்த சிங்களக் காடையர்கள் அபகரித்துச் சென்றுள்ளதோடு கேவலமான முறையில் அசிங்கப்படுத்தியும் உள்ளார்கள்.

யாழ்—தொண்டமானாறு புகழ்மிக்க செல்வச் சந்நிதி ஆலயமும் பாதகர்களின் பாசிச வெறிக்குப் பாழாகியுள்ளது. இரா்ணுவ முகாமிற்கு உள்ளிருந்தே ஏவப்பட்ட ராக்கெட் தாக்குதல்களினால் கோவில்மணிக் கோபுரம் உடைத்து வீழ்த்தப்பட்டுள்ளது. கட்டிடங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. 40 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தேரும் சிறிலங்கா அரசின் ஏவல் நாய்களால் எரிக்கப்பட்டுள்ளது. அட்சகரின் மகன் கைகள் கட்டப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு சித்திரவதைகளுக்குப்பின் முகாமிற்கு இழுத்துச் செல்லப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரிசி குத்தும் ஆலை, ஆயுதப் படையினரின் சவக்காலை!

### விவசாய பொருளாதார தடை!
### நெல் உற்பத்தி மழுங்கடிப்பு!
### உணவு பஞ்சத்திற்கு அத்திவாரம்!

மட்டக்களப்பு—கல்முனைப் பகுதியில் அமைந்துள்ள தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய அரிசி குத்தும் ஆலையான ''சவளைக்கடை'' அரிசி ஆலையை சிறிலங்கா இராணுவத்தினர் மூடிவிட்டு அதில் சிறிலங்கா அரசு தனது இராணுவ தளத்தை அமைத்துள்ளது.

சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இவ் ஆலையிலிருந்தேதான் ஏராளமான இடங்களுக்கு அரிசி வினியோகம் செய்யப்படுகிறது. தமிழர் பகுதிகளில் உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவும், அப்பகுதிகளி லிருந்து விவசாயிகளின் நெல் கொள்வனவை தடை செய்யவும், அப்பகுதியிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையுமே ஆகும். இதுவரை சுமார் 142 தமிழ் குடும்பங்கள் உடைமைகள், வீடு வாசல்களை இழந்து ஊரைவிட்டு வெளியேறியுள்ளனர். கண்ணி வெடியில் பாதிக்காத ' A.P.C.'' எனப்படும் நவீன கவச வாகனங்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சென்ற வாரம் இம்முகாமை அண்மித்த பகுதியின் வீடு களில் புகுந்து 5 இளம் பெண்களை இவர்கள் பிடித்துச் சென்றிருந்தனர். இவர்களில் மூவர் கற்பழிக்கப்பட்ட நிலையில் வீதியில் வீசப்பட்டு இறந்து கிடந்தனர்.

## கோட்டை நர வேட்டையாளர்கள் மீது மோட்டார் பீரங்கி தாக்குதல்!

ஏப்ரல் 17 : யாழ் கோட்டை இராணுவ முகாமி லிருந்து கவச வண்டிகள் சகிதம் வெளியேறிய இராணுவத்தினர்மீது அனைத்து இயக்கங்களும் தாக்குதல் தொடுத்தன. நேரம் நடை பெற்ற இந்த நேருக்கு நேர் மோதலில் ஆயுதப்படையினரால் ஒரு அங்குலம் கூட முன்னே நகரமுடியவில்லை.

''ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி''யின் மக்கள் விடுதலைப் படையின்மோட்டார் பீரங்கி தாக்குத லில் நீண்டஇதில் குருநாகல் இராணுவமுகாமைச் சேர்ந்த கருணாரட்ன (30), அபயசிறி (29), ஆகிய இருவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். களனியைச் சேர்ந்த விரசிங்கா (25), காமினி அப்புகாமி (29), சிறில் பெரேரா (31) பலத்த காயங்களுடன் கொழும்புக்கு உடனடியாக விமானத்தில் கொண்டு செல்லப்பட்டனர். போராளிகளில் ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்டது.

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில்; நாவற் குழியைச் சேர்ந்த அருட் பிரகாசம் ரஞ்சன் (23), சுப்ரமணியம் குயின் நாலு வயது குழந்தை ஒன்றும் பலியானதை தொடர்ந்தே கோட்டையிலிருந்து வேட்டையாட வெளியேறிய இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்குதல் தொடுத்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

## மீனவர் வாழ்வைப் பாழடித்திட்ட, கட்டாய கடற் பாதுகாப்பு வலையப் பிரகடனத்தைக் கவிழ்த்திட போராளிகளின் கடற்போர்!

### பீரங்கிப் படகுகள் மூழ்கடிப்பு!
### 25க்கும் மேற்பட்ட கைக்கூலிகள் பலி!

கடல் கண்காணிப்பு வலையப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தும் முகமாக மீன் பிடிக்கக் கூடாது என தடை செய்யப்பட்டிருந்த காஙகேசன்துறைக்கும் ஊர்காவல் துறைப் பகுதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) இன் மக்கள் விடுதலைப் படை (PLA) இனால் தொடர்ச்சியாக மூன்று பீரங்கி விசைப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதோடு 25க்கும் மேற்பட்ட எதிரிகள் கொல்லப்பட்டனர்.

மார்ச் 15 : ''ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி''யின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையினர் வைத்த கடல் கண்ணி வெடியில் சிக்கிய கப்பல் படையினரின் பீரங்கிப் படகொன்று சின்னா பின்னமானது. அதில் நான்கு சிப்பாய்கள் கொல்லப் பட்டனர்.

மார்ச் 17 : இதைத் தொடர்ந்து கடல் கண்ணி வெடிகளைக் கண்டு பிடிக்கும் நவீன கருவிகள் பொருத்தப் பட்ட மற்றுமொரு பீரங்கிப் படகு மறுநாள் ''மக்கள் விடுதலைப் படை''வைத்த கண்ணிவெடியில் சிக்கிச் சுக்கு நூறானது. சுமார் 20 பேர் அதில் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப் பட்டனர்.

மார்ச் 19 : கப்பல் படையினர் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த சிப்பாய்கள் மீண்டும் தீவிர கண்ணி வெடித்தேடுதலை மேற்கொள்ள வந்தபோது போராளிகள் (மக்கள் விடுதலைப் படையினர்) வைத்த இரண்டு கண்ணி வெடியில் சிக்கிய பீரங்கிப் படகு சிதறியது. இதில் வந்த சிப்பாய்களில் யாரும் தப்பிக் கரை சேர்ந்ததாகத் தெரியவில்லை.



விடுதலையை வென்றெடுக்கவே எம்மிடம் ஆயுதம்!
வீர சாகசங்களுக்காக அல்ல!
என்றுரைக்கும் . . . . . .
''மக்கள் விடுதலைப் படை''

www.tamilarangam.net

# உதிரத் துளிகள் ஊரமாய் – இங்கு உணர்வுகள் வளரும் மரமாய்!!.

**மார்ச் 02 :** கிளிநொச்சி—கரடிப்போக்கு என்னுமிடத்தில் 4 பேர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

**மார்ச் 03 :** யாழ்—வலிகாமம் வடக்குப் பகுதிகளில் காலை 10.00 மணியளவில் விமானக்குண்டுவீச்சு. வசாவிளான், தெல்லிப்பளை, கட்டுவன், அச்சுவேலி. மக்கள் பதட்டம். ● திருகோணமலை—இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 46 பேர் காலியிலுள்ள ''பூசா'' முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். ● கரடிப்போக்கு—என்னுமிடத்தில் இராணுவத்தால் சுடப்பட்ட ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில்.

**மார்ச் 07 :** வவுனியா—கண்ணாட்டியில் 8 வீடுகளும், 2 கடைகளும் சூறையாடப்பட்டு இராணுவத்தினரால் எரிக்கப்பட்டுள்ளன. 3 வீடுகள் தீ பரவாது பொது மக்களால் அணைக்கப்பட்டன. இருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். 4 பேர் காயம். வீடுகளை விட்டு உயிர் தப்பியோடிய பல குடும்பங்களைக் காணவில்லை. இப்பகுதியில் வந்து குடியேறிய இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஊரைவிட்டு வெளியேறி பெரிய குளத்தில் தஞ்சம்.

**மார்ச் 10, 11 :** கிளிநொச்சி மாவட்டம்—துணுக்காய், மல்லாவி ஆகிய பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு இராணுவ வேட்டை. 6 வயது, 9 வயது சிறுமிகள் உட்பட 11 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். 18 பேர் காயம். 34 பேர் கைது. ஒரு பலநோக்கு கூட்டுறவு சங்கம் உட்பட 3 கடைகள் தீக்கிரை.

**மார்ச் 12 :** அதிகாலை 54.5 அளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து மூன்று குண்டு வீச்சு விமானங்களிலும், மூன்று ஹெலிக்கொப்டர்களிலும் வந்த விமானப்படையினர் வல்வெட்டித்துறையைக் குண்டுவீசித் தாக்கினர். மயில்வாகனம், வல்லிபுரம், மனைவி தங்கம்மா, மகன் திருக்குமரன் உட்பட ஒரு குடும்பம் வீட்டோடு சமாதி. கந்தசாமி செல்லமுத்து(65), மகேந்திரன் பாலாமணி (40), வினோதினி என்னும் குடும்பம் யாழ்—மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 25க்கு மேற்பட்டோர் காயம். ● திருகோணமலை—நிலாவெளியில் அதிகாலை 3 மணி தொடக்கம் 9 மணி வரை தேடுதல் வேட்டை— சோதனை. 6 பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர். ஆண்கள், பெண்கள் உட்பட 23 பேர் கைது.

**மார்ச் 14 :** பரந்தன்—மூன்றாம் கட்டை பகுதிகளுக்கு கவச வண்டிகளிலும், தனியார் பஸ்களிலும் திடீரென வந்திறங்கிய இராணுவத்தினர் அட்டகாசம். துப்பாக்கிப் பிரயோகம். உழவு இயந்திரத்தில் வயலுக்குச் சென்ற சிவநாதன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மக்கள் சிதறி ஓட்டம். பலர் காயம்.

**மார்ச் 16 :** பலாலி—வேலை முடிந்து வீடு திரும்பிய செல்லையா ஆறுமுகம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**மார்ச் 17 :** மிகவும் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த கடற்படைப் பீரங்கிப் படகொன்று போராளிகளினால் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊர்காவல்துறைப் பகுதியை நோக்கிப் போர்க்கப்பல் குண்டு வீச்சு. 2 வீடுகள் முற்றாகச் சேதமானது. காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதி. மக்கள் பீதி. பல குடும்பங்கள் குடிபெயர்வு. ● நாவற்குழி—கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்து விட்டு வீடு திரும்பிய 15 வயது சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்டான். யாழ், மணிப்புரி என்னுமிடத்தைச் சேர்ந்த கதிர்காமநாதன், பாலமுருகன் என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டார். ● திருகோணமலை—கிண்ணியாவில் ஊர்காவல்படைக் குண்டர்களுக்கும் போராளிகளுக்குமிடையே நேருக்கு நேர் மோதல். 2 ஊர்காவல் படைக் குண்டர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக வீதியில் வந்து கொண்டிருந்த 5 முஸ்லீம்களை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். ● உடுவில், மானிப்பாய் பகுதியில் இரு ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து வட்டமிட்டுச் சென்றன. பின்னர் வந்து குண்டுவீசித் தாக்குவதற்கான ஒத்திகையே இதுவென மக்கள் பதட்டம்.

### சிறிலங்கா மீது ரஷ்யா வர்த்தகத் தடை!

கடந்த பத்து மாதகாலமாக இலங்கை தேயிலையை சோவியத் ரஷ்யா கொள்வனவு செய்யவில்லை. இதனால் உலக சந்தையில் இலங்கை தேயிலையின் விலை ஒரு கிலோவுக்கு சுமார் 10 ரூபா முதல் 15 ரூபா வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

### இந்தியா மீதான அவதூறு!

தமிழ் நாட்டிற்கு உயிர்தப்பி அகதிகளாக வந்துள்ள ஒன்றேகால் இலட்சம் தமிழ் மக்கள் 'மீண்டும் தாயகம் திரும்ப விரும்புவதாகவும், அதை இந்திய அரசு தடுத்ததாகவும் கூறிய சிறிலங்கா அரசின் ஆதார மற்ற குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது,

### யார் பயங்கரவாதி?

பயங்கரவாதிகள் ஆயுதங் களைக் கீழே வைத்தால்தான் பேச்சு வார்த்தை சரிவரும் எனக்கூறும் சிறிலங்கா அரசு; முதலில் தாம் ஆயுதங்களைக் கீழே வைத்திருக்க வேண்டும் : என இலங்கை ''மக்கள் கட்சி'' அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராளித்துவ உக்கட்டும்! மேவதனம் எழுதும் சட்டம்!!

**மார்ச் 18 :** உருத்திரபுரம்—கவச வாகனங்களிலும், தனியார் உழவு இயந்திரங்களிலும், ஜீப் வண்டிகளிலும் வந்திறங்கிய இராணுவத்தினரால் அப்பகுதி முற்றுகை. 25க்கும் 30 வயதிற்கும் உட்பட்ட 18 இளைஞர்கள் கைது. 8ம் வாய்க்காலில் 3 இளைஞர்கள் கைது. சத்தக் குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

**மார்ச் 19 :** மூதூர்—மணற்சேனை, பெருவெளி ஆகிய இடங்களில் பல வீடுகளும், கடைகளும் கொளுத்தப் பட்டன. மக்கள் கோயில்களில் தஞ்சம். ● கல்முனை—நற்பிட்டி முனையில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**மார்ச் 20 :** நெடுங்கேணி—பெரிய குளம் என்ற இடத்தில் 25 வீடுகளும், ஈட்டி முறிந்தான் என்ற இடத்தில் 10 வீடுகளும் முற்றாக எரிக்கப்பட்டு சாம்பல். இராசையா என்பவரின் கடை இரத்த வெள்ளத்தில் காணப்பட்டது. ● மட்டக்களப்பு—நடை பவனியாக வந்த இராணுவத்தினர் சந்திகளில் நின்ற அனைவரையும் பிடித்து வண்டிகளில் ஏற்றிச் சென்றார்கள். சுமார் 500 பேருக்கும் அதிகமானோர் எனத்தெரிய வருகிறது.

**மார்ச் 21 :** புதுக்குடியிருப்பு—மூன்று மாதங்களுக்கு முன்பு திருமணமான பெர்னாண்டோ பீலிக்ஸ், அவரது மனைவி யூவியானாகிறோசிம் என்பவர்கள் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலி. ● திருகோணமலை—தச்சனூர் என்னுமிடம் காலை 9.00 மணியளவில் முற்றுகை. பிரான்சிஸ் சிங்கம், பஞ்சுளாச்சிங்கம், பிலிப்பியன்தாதர், ஆண்டவன் செல்லையா ஆகியோர் உட்பட 9 இளைஞர்கள் சித்திரவதையின் பின் கைது. ஏனையோருக்கு துப்பாக்கியால் அடி உதை.

**மார்ச் 23 :** தொண்டமானாறு இராணுவ முகாமில் குண்டு வீச்சு விமானமொன்று தரையிறக்கப்படும்போது அது போராளிகளினால் தாக்கப்பட்டு அதன் விசிறி ஒன்று சிதறியது. அது தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் திரும்பிச் சென்றுவிட்டது. பின் இன்னொரு கெலிக்கொப்டர் வந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கித் தாக்கத் தொடங்கியது. பின் தொண்டமானாறு பாலத்தடியில் வந்த இராணுவத்தினர் மீதான தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயம். ● ஆனையிறவு—வந்தில் என்னுமிடத்தில் போவோர் வருவோரைச் சுட்டுக் காயப்படுத்தி முகாமிற்கு இழுத்துச் சென்றனர். உப்பளத்தில் வேலை செய்யும் 8 பேர் உட்பட 14 பேர் கைது. ● மூதூர்—கட்டை பறிச்சான் காலை 7-00 மணியளவில் சுற்றி வளைப்பு. தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் தாக்குதல். 4 பேர் சுட்டுக் கொலை. 12 பேருக்கும் அதிகமானோர் காயம். 3 பெண்கள் உட்பட 15 பேர் கைது. மக்கள் உடைமைகளை விட்டு ஓட்டம். ● முல்லைத்தீவு—4 கவச வண்டிகளின் பாதுகாப்பில் வந்த சுமார் 400 இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம். கைக்குண்டுகள் வீச்சு. 50க்கும் மேற்பட்ட பொது மக்கள் காயம். ● வவுனியா— சுற்றி வளைப்பு. 24 மணி நேர தேடுதல் வேட்டை. வேட்டொலிகளும், குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்ட வண்ணமேயிருந்தன. கைது செய்யப்பட்டோர் விபரம் தெரியவில்லை.

**மார்ச் 24 :** வண்ணை:—காலை 8-30 மணியளவில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 6 மீனவர்கள் மீது கோட்டை இராணுவத்தினர் பீரங்கி வேட்டுக்கள் தீர்த்தனர். அவர்கள் கடலில் குதித்து உயிர் தப்பினர். இவர்கள் நவாலிப் பகுதியைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர்கள். ● நாவற்குழி— முகாமிலிருந்து இராணுவம் வெளி வந்து மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம். போராளிகள் எதிர்த்தபோது இராணுவம் பின் வாங்கியது.

**மார்ச் 25 :** கோட்டை இராணுவத்தினர் யாழ் நகர மத்திக்குத் திடீரென வந்திறங்கினர். நகரம் வெறிச்சோடியது. ● முல்லை தீவு—இராணுவ முகாமிலிருந்து மாலை 6-00 மணியளவில் வெளியே வந்த கறுப்புச் சட்டைக் கூலிப்படையினர் கண்டபடி சுடத் தொடங்கினர். ஒருவர் பலி. கைக்குண்டுகள் வெடிப்பு. 25க்கும் மேற்பட்டோர் காயம். ● தொண்டமானாறு—முகாமிலிருந்து வந்த இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலி. 5 பேர் காயம். போராளிகளின் எதிர்த் தாக்குதலையடுத்து இராணுவம் மீண்டும் முகாமிற்குள் புகுந்து கொண்டது. ● வவுனியா—கண்ணிவெடியில் சிக்கி 7 பொலிசார் படுகாயம். ஜீப் வண்டி முற்றாகச் சேதம். அனுராதபுர வைத்திய சாலையில் இரு பொலிசார் கவலைக்கிடம்.

**மார்ச் 26 :** வவுனியா—4 வீடுகள் எரிப்பு. திருமதி புவனேஸ்வரி மகேஸ்வரன் (47), சதாசிவம் கமலநாதன் (22) மாணிக்க துரைராஜா (40), கோவிந்தா (45), 60 வயது மதிக்கத்தக்க இன்னொருவர் உட்பட 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 20 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்ட 14 இளைஞர்கள் கைது. ● தெல்லிப்பழை—கட்டுவன் பகுதியில் 11-00 மணியிலிருந்து 4 00 மணி வரை விமானத் தாக்குதல். ஆனந்தன் (25) என்பவர் உட்பட இருவர் பலி. 2 பெண்கள் உட்பட 5 பேர் படுகாயம். 15 வீடுகள் சேதம். 3 வீடுகள் எரிந்து சாம்பல். (விமானத் தாக்குதலை நிறுத்துவதாக சிறிலங்கா அரசு கூறிய 24 மணி நேரத்துக்குள் இத்தாக்குதல் நடந்தது.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிராயுதபாணிகளை ஆயுதபாணிகளாக்கும் அரசின் அடக்குமுறை!

**மார்ச் 27 :** திருகோணமலை-சாம்பல்தீவு, ஆச்சிமோட்டைப் பகுதிகளில் கடந்த செவ்வாய் இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையில் 10 இளம் பெண்கள் உட்பட 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ● கடந்த வெள்ளி தொடக்கம் தொண்டமானாறில் இராணுவம் சுட்டுக் கொன்றவர்களில் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கந்தசாமி (70), சண்முகம் (60), ஆறுமுகம் (62), சுப்ரமணியன் (50) என்னும் வயோதிபர்களே இவர்கள்.

**மார்ச் 28 .** திருமலை—கந்தளாய் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் கண்ணி வெடியில் சிதறினர். பண்டா (27), பெர்ணாண்டோ (41), ஜெய ரத்தின (21), சோமதாச(34), எட்மன் சில்வா (40) ஆகியோர் உட்பட 7 பேர் பலி. பலர் படுகாயம். கவச வாகனம் சின்னாபின்னம்.

**மார்ச் 29 :** வவுனியா—ஓமந்தையில் தற்காலிக இராணுவ முகாம் ஒன்று அமைக்கும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன. ● மட்டக்களப்பு — காரைதீவு சுற்றி வளைப்பு. ஆண்களும், பெண்களுமாக வயது வித்தியாசமின்றி சுமார் 300 பேர் அளவில் கைது. ● ஆரயம்பதி—என்னுமிடத்தில் 8 இளைஞர்கள் கைது. ● பருத்தித்துறை கடலோரப் பகுதி விமானத்தாக்குதலை தொடர்ந்து நவீன சந்தைப் பகுதியிலும் நடத்தப் பட்டபோது போராளிகளின் எதிர்த் தாக்குதலையடுத்து ஹெலிக்காப்டர் முகாமிற்குத் திரும்பியது. ● ஊர் காவற்துறை கடல்பகுதியாக வந்து குண்டுவீசிய "ஹெலி" ஒன்று போராளிகளின் தாக்குதலையடுத்து திரும்பியது.

**மார்ச் 30 :** பரந்தன்—முரசு மோட்டையில் நடை பவனியாக வந்த சிறிலங்கா கூலிப் பட்டாளம் பெரும் அட்டகாசம். போக்குவரத்துக்களை கண்டபடி குழப்பினார்கள். பல வயல்கள் கொழுத்தப்பட்டன. ● மட்டக்களப்பு-காலை 11-00 மணியளவில் உழவு, இயந்திரமொன்றில் வயலுக்குச் சென்ற நீலன் சத்தியநாதன் (27), தயாளன் (28) என்னுமிருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சாரதி ஏரம்பு (23) பலத்த காயங்களுடன் ஏறாவூர் மருத்துவ மனையில் சிகிச்சை.

**மார்ச் 31 :** மட்டக்களப்பு— வந்தாறு மூலை என்னுமிடத்தில் காலை போராளிகளுக்கும், இராணுவத்தினருக்கு மிடையே 1 மணி நேரம் துப்பாக்கிச் சண்டை. பிரேம ரத்னா (23), தர்மரத்னா (24) என்னும் சிப்பாய்கள் உட்பட மூவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். படுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப் பட்ட நான்கு சிப்பாய்களில் இருவர் மரணம். ஓடமுடியாது காயங்களுக்குட்பட்ட போராளிகள் இருவர் "சயனைட்" அருந்தி வீர மரணம்.

**ஏப்ரல் 01 :** முல்லைத்தீவு—இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகள் சுற்றிவளைப்பு, வீடுவீடாகச் சோதனை. 13 பேர் கைது. சோதனை முடிந்து வெளியேறியபின், இராணுவத்தினரின் தகவல்களுக்கேற்ப கடலில் இருந்த கப்பல்படைப் பீரங்கி சில குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி குண்டு வீசித் தாக்கியது. வீடுகள் சேதம். மக்கள் காயப்பட்டனர். உயிரிழப்புகள் பற்றித் தெரியவில்லை. ● வவுனியா—சிவன்] கோயில் பகுதி சுற்றிவளைப்பு. 4 பிள்ளைகளின் தந்தையான இராசன் (28), ரெயில்வே ஊழியர் கோவிந்தராசன் (20) 19, 29, 30 வயது மதிக்கத்தக்க மற்றும் மூவர் உட்பட 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். சல்லடையாக்கப்பட்ட சடலங்கள் ரக் வண்டியொன்றில் ஏற்றப்பட்டன. வயோதிபர்கள் பாடசாலைச் சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 35 பேர் அளவில் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

**ஏப்ரல் 02 :** மட்டக்களப்பு—அரசினர் காரியாலயங்களில் வேலை செய்துவிட்டு இரவு நேரங்களில் வீடு திரும்பும் ஊழியர்கள் இராணுவத்தினரால் தாக்கப்படுவதோடு பிடித்துச் செல்லப்படுகின்றார்கள்.

**ஏப்ரல் 03 :** ஊர்காவல்துறை—இரவு 9.30 மணியிலிருந்து 11 மணிவரை பீரங்கிப்படகுகள் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி வேட்டுக்கள் தீர்த்துக்கொண்டிருக்கும்போது ஹெலிக்கொப்டர்கள் குண்டுவீசித் தாக்கின.

**ஏப்ரல் 04 :** முறிகண்டி—புத்துவெட்டுவானில் காலை 4.30 மணி அளவில் நிலக்கண்ணி வெடியில் ஒரு இராணுவ "லெப்டினண்ட்" உட்பட 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். உடன் கவச வண்டிகள் வரவழைக்கப்பட்டும் நகர முடியவில்லை. ● யாழ்—சேந்தான் குளம், அளவெட்டி, கீரிமலை, இளவாலை, பெரிய விளான் பகுதிகள் 4½ மணிநேர விமானத் தாக்குதல்களுக்குட்பட்டன. பலர் பலி. ஏராளமானோர் படுகாயம். பல வீடுகள் சேதம். போராளிகளின் எதிர்த்தாக்குதலில் ஹெலிக்கொப்டர் ஒன்று பின்வாங்கியதால் பீரங்கிக் கப்பலொன்று மக்கள் பகுதியை நோக்கி குண்டுவீசித் தாக்கத் தொடங்கியது. வீடுகள், கடைகள் சேதம். இதே வேளை கறுப்பு உடை கொலைக்குண்டர்களுக்கும் போராளிகளுக்கும் இடையே பல இடங்களில் நேரடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ● அனுராதபுரத்திலிருந்து புதிய கவச வாகனங்களும், ரக்வண்டிகளும் வட பகுதிக்கு வந்து சேர்ந்தன. இதிலிருந்து பாரிய பெட்டிகளை இறக்குவதற்குப் பொதுமக்கள் சிலர் பிடித்துச் செல்லப் பட்டுள்ளதாக தெரியவருகிறது. ● கொக்குவில்—தேடுதல் வேட்டையில் 8 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ● வவுனியா—மன்னார் வீதியில் 6 பேர் கைது. ● கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகளில் குண்டுவீச்சு.

**ஏப்ரல் 05 :** அக்கரைப்பற்று—திருக்கோயில் கடல் பிராந்தியத்தில் திடீரெனத் தோன்றி உலாவிய கப்பலின் வருகையைத் தொடர்ந்து கடல் மார்க்கமாகவும், ஆகாயமார்க்கமாகவும் கண்காணிப்புக்கள் பலப்படுத்தப் பட்டுள்ளன. ● பருத்தித்துறை—தேவராஜா (20), மரியநாயகம் (35) ஆகிய இரு மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம். இராணுவத்தினரால் அடிக்கப்பட்டு, முகம் சிதைக்கப்பட்டுப் பிடித்துச் செல்லப் பட்டுள்ளனர். ● அம்பாறை மாவட்டம்—பத்தாம்பட்டியில் 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கழுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

**ஏப்ரல் 06 :** யாழ்—அதிகாலை 5.00 மணியிலிருந்து 3 மணி வரை மக்கள் செறிவுள்ள யாழ் நகர மையப் பகுதிகளான பண்ணை, பெரிய கடை, முதலாம் குறுக்குத்தெரு, கடற்கரைவீதி, குருநகர், அத்தியடி பகுதிகளில் விமானத்தாக்குதல். வீடுகள் கடைகள் சேதம். குருநகர் சகாய ரூபன் (26), S. கிருபை (28) உட்பட நால்வர் பலி. 5 பெண்கள் ஒரு சிறுவன் உட்பட 13 பேருக்கு மேற்பட்டோர் சிகிச்சை. ● கிளிநொச்சி—புதுமுறிப்பில் தென்னிந்திய தொழிற்சங்க காவலாளி இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். ● ஊர்காவல்துறை, காரை நகர் பகுதிகளில் இரவு 9½ மணியிலிருந்து ஹெலிக்கொப்டர், கடற்படைப் பீரங்கித் தாக்குதல். 10 பேர் காயம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**ஏப்ரல் 07 :** அக்கரைப்பற்று—தம்பிலுவில் நண்பகலிலிருந்து 6 மணிவரை சுற்றிவளைக்கப்பட்டு வீடுகள் சல்லடையாக்கப்பட்ட வேளை போராளிகட்கும் இராணுவத்தினருக்குமிடையே பெரும் மோதல் ஏற்பட்டது. ● பலாலி—அதிகாலை பலாலி இராணுவ முகாமிலிருந்து kks துறைமுகம் வரை கால்நடையாக இராணுவம் வந்தது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம். மைலிட்டி, தையிட்டி, ஊரணி மக்கள் பதட்டம். ● நெடுங்கேணி—மருதனோடை, காஞ்சிகோட்டை பகுதிகளை சுற்றி வளைத்த இராணுவத்தினரால் கல்யாண பெருமாள் (38), பெருமாள் செல்லையா (34), வெங்கடாசலம்(3 ), சுப்பையா (38) ஆகிய நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**ஏப்ரல் 08 :** குமுளமுனையிலிருந்து பட்டிக்குடியிருப்பு கோவிலுக்கு வந்த நால்வரை ஊர்காவல் படைக் கூலிக் கொலைக் குண்டர்கள் பிடித்து அடித்ததே கொலை செய்துள்ளனர். அவர்களிடமிருந்த பணம், மணிக்கூடு என்பன அபகரிக்கப்பட்டுள்ளன. நெடுங்கேணி என்னுமிடத்தில் அவர்களின் சடலங்கள் பொது மக்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ● தொண்டமானாறு—கெருடாவிலுள்ள வீடுகள் விமானக் குண்டு வீச்சில் நாசம். போராளி களின் பதில் தாக்குதலில் ஹெலிக்கொப்டரிலிருந்த இராணுவத்தினர் காயம். ஹெலிக்கொப்டர் பின்வாங்கியது. ● மூதூர் கடற்கரைச் சேனைக் கிராமத்தில் 29 வயது இளம் பெண் ஒருவர் இராணுவத்தினரின் கையில் சிக்குண்டதைத் தொடர்ந்து கவலைக்கிடமான நிலையில் அவர் காட்டுக்குள் காணப்பட்டு பொது மக்களால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**ஏப்ரல் 09 :** மாங்குளத்தில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மாங்குளத்தைச் சேர்ந்த இதயராஜா(25) என்பவரின் சடலம் பற்றைக்குள் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இப்பகுதியில் இனந்தெரியாதவாறு சிதைக்கப்பட்ட நிலையில் அழுகிய இரு சடலங்களும் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இவர்களும் விசாரணைக்காக இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்களெனத் தெரியவருகிறது. ● தொண்டமானாறு—இராணுவ முகாமிலிருந்து செல்வச் சந்நிதி கோவிலுக்கு வீசப்படும் செல்தாக்குதல் நிறுத் தப்பட்டுள்ளது.

**ஏப்ரல் 11 :** பருத்தித்துறை—இன்புறுட்டி, சக்கோட்டை கடற்கரை பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கைது. சித்திரவதையின் பின் முகாமிற்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

**ஏப்ரல் 12 :** திருகோணமலை— திரியா என்னுமிடத்தில் 5 பெண்களும், 13 வயது சிறுமியும், 22, 24 வயதுள்ள திருமணமான இரு பெண்களும் இராணுவத்தினரின் குரூர வெறிக்கு இலக்காகியுள்ளனர். ● கீரிமலை—கடற் பிராந்தியத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த மூன்று பீரங்கிப் படகுகள் நகரத் தொடங்கியுள்ளன.

**ஏப்ரல் 13 :** பலாலி—இராணுவ முகாமைச் சுற்றியுள்ள வீடுகள் ''புள்டோசர்''களினால் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடிவான முடிவுகளைத் தேடி — இவர்கள் வீட்டை விட்டு வீதிகளுக்கு வருகிறார்கள்.


**ஏப்ரல் 14 :** திருகோணமலை — கும்புறுபிட்டியில் இராணுவத்தால் கைதான விவசாயி கொலை. ● மட்டக்களப்பு—கல்முனை 3ம் குறிச்சியில் சராசரி 25 வயது மதிக்கத்தக்க 6 இளைஞர்கள் கைது. ● ஆலங்கேணி— 5 இளைஞர்களும் 10 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனும் கைது.

**ஏப்ரல் 15 :** மட்டுநகர்—வாகரை கண்ணிவெடியில் 5 இராணுவம் பலி. ● நள்ளிரவு கோட்டைக்குள்ளிருந்து குண்டு தாக்குதல்.

**ஏப்ரல் 16 :** மட்டுநகர்— அண்மை கிராமப் பகுதிகளிலிருந்து 10—13 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 10 பேர் அளவில் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

**ஏப்ரல் 17 :** கோட்டை முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது போராளிகள் (அனைத்து இயக்கங்களும்) தாக்கினர். P. L. A. இன் மோட்டார் பீரங்கி தாக்குதலில் 2 ஆயுதப்படையினர் மரணம்.

**ஏப்ரல் 18 :** கிளிநொச்சி— நான்காம் வாய்க்காலில் தேடுதல் வேட்டையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ● நாவற்குழி வீதியில் இளைஞர் ஒருவர் கட்டி வைக்கப்பட்டுச் சித்திரவதை. ● சேத்தான் குளம்—தூண்டில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். ● தொண்டமானாறு மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் சுடப்பட்டார்.



**ஏப்ரல் 19:** மூதூர்—கட்டைபறிச்சான் கிராமத்தில் அடையாளம் காணப்படாத 3 சடலங்கள் மீட்பு. ● மட்டக்களப்பு—அருணகிரி வீதியில்,5 இளைஞர்கள் கைது.

**ஏப்ரல் 20 :** திருவடி நிலைக் கடற்பகுதியிலிருந்து கப்பல் படையினரின் தாக்குதலில் இரண்டரை வயதுக் குழந்தை ஒன்றின் தலை வெடித்து பலி. ● ஒட்டி சுட்டான் இளைஞர் ஒருவர் கைது.

**ஏப்ரல் 22 :** கிளிநொச்சி— பரந்தன், [illegible]மோட்டை புளியம் பொக்கணை, வட்டக்கச்சி பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை, கைது செய்யப்பட்டோர் விபரம் தெரியவில்லை.

**ஏப்ரல் 24 :** பருத்தித்துறை— கடலில் மீன் பிடிக்கச் சென்ற இருவர் மீது கப்பல்படை தாக்குதல். காயப்பட்ட அம்மீனவர்கள் கரை சேரவில்லை.

**ஏப்ரல் 25 :** மூதூர்—தேடுதல் வேட்டைக்கு 4 பெண்கள், 3 குழந்தைகள், 2 வயோதிபர்கள் பலி.

**ஏப்ரல் 26 :** மட்டக்களப்பு—பட்டிருப்பு பாலம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. சித்தாண்டி கிராமத்தில் 4 பேர் சுடப்பட்டனர். ● உயிலங்குளத்தில் அறுவடை செய்து கொண்டிருந்த இளைஞர்கள் இராணுவ துப்பாக்கி வேட்டுக்கு இலக்கு.

**ஏப்ரல் 27 :** புளியம் பொக்கணை, தருமபுரம் பகுதிகள் விமான பாதுகாப்போடு தேடுதல் வேட்டை; இரு ரக் வண்டிகள் நிறைய பொதுமக்கள் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

**ஏப்ரல் 28 :** அகதிகளாக இந்தியா வந்த 34 பேர் கடற்படையினரால் கைது. ● மட்டக்களப்பு—பழுகாமத்தில் விமானக் குண்டு வீச்சு. 7 பொதுமக்கள் பலி 5 வீடுகள் முற்றாகச் சேதம்.

**ஏப்ரல் 29 :** மூதூர்—கட்டை பறிச்சான் கண்ணி வெடியில் 4 சிப்பாய்கள் பலி. ● மட்டக்களப்பு—வந்தாறுமூலையில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**ஏப்ரல் 30 :** மூதூர்—திரியாயில் 17 அகதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ● பரந்தன்—முல்லைத் தீவு வீதியில் ஆயுதப்படையினரை வழிமறித்து மக்கள் விடுதலைப்படை தாக்குதல் நடத்தியது. இராணுவம் முகாமிற்குள் பின்வாங்கியது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

RADIO EELAM
ஈழவானொலி

# ஈழவானொலி செய்திக்கண்ணோட்டம்

⁂ சிறிலங்காவின் போக்குகளின்படி ''பேச்சு வார்த்தை'' என்பது முடியாத காரியம் என இந்திய இராஜாங்க அமைச்சர் கே. ஆர். நாராயணன் தெரிவித்தார்.

⁂ மத்திய தரைக் கடலில் தனது அநாகரீகத்தை' அச்சுறுத்தலை வெளிப்படுத்திய அமெரிக்காவின்; இந்து சமுத்திர ஆதிக்க மறைமுகப்போக்கு எத்தனை நாளைக்கு நீடிக்கப் போகிறது?

⁂ ஈழப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு கண்டாக வேண்டும். இல்லையேல் பொருளாதாரப் படுகுழியில் விழும் அபாயம் உண்டு. இராணுவ தேவைக்குப் பிற்பாடே ஏனைய அபிவிருத்திகளுக்கு நிதி ஒதுக்கப் படும். வரவு-செலவுத் திட்டக்கொள்கை கடைப் பிடிக்கப்படுகிறது. என நிதிமந்திரி ரொனி டிமெல் ஜெயவர்த்தனாவை எச்சரிக்கை செய்துள்ளான்.

⁂ தாதிமார் தொழிற்சங்க தலைவர் பௌத்தபிக்கு ''முருத்தட்டுவே ஆனந்த தேரோ'' தலைமையில் ஜெயவர்த்தனாவுக்கு எதிராக 27ம் தேதி புத்தபிட்சுகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள். கடந்த 19ம் திகதி தொடக்கம் தாதிமார் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து ஏற்பட்ட முரண்பாடுகளின் வளர்ச்சியில் இப்போது ஜெயவர்த்தனாவுக்கும் புத்தபிட்சுகளுக்கு மிடையில் பெரும் மோதல்கள் வெடித்துச் சிதறும்போல் காணப்படுகிறது.

⁂ தமிழ் போராளிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். என அகில இலங்கை ரோமன் கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு கோரிக்கை விடுத் துள்ளது.

⁂ லிபியா விடயத்தில் அமெரிக்காவையும், பிரிட்ட னையும் வாய்மூடி மௌனியாக இருக்கும் இலங்கை வன்மையாக கண்டிக்கவேண்டும். லிபியாவுக்கு இலங்கை பூரண ஆதரவு வழங்க வேண்டும். என்று ஜெயவர்த்தனாவுக்கும், லிபிய, அமெரிக்க, பிரிட்டன் தூதரகங்களுக்கும் முஸ்லிம் மக்கள் மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

⁂ லிபியாவை ஆதரித்து கொழும்பிலும் நடந்த முஸ்லீம் மக்களின் ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க தேசியக் கொடி எரிக்கப்பட்டது.

⁂ ஹோலந்து நாட்டில் 2வது நாளாக நேற்றும் (26/04/85) தமிழ் அகதிகள் ஆர்ப்பாட்டம். 150 அகதிகள் உண்ணாவிரதம்.

⁂ கந்தளாய் அணையுடைப்பு சம்பந்தமாக அதற்கு பொறுப்பான அமைச்சர் காமினிதிசநாயக்கா பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என சிறிமாபண்டார நாயக்கா அறிக்கை விடுத்துள்ளார்.

⁂ திருகோணமலை அகதிகள் புனர்வாழ்வு நிலையத் தலைவர் டாக்டர் சசிதரன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

⁂ பலநாடுகள் ஒன்று சேர்ந்த ''பாரீஸ் கொன்-சோட்டியம்'' எனப்படும் சிறிலங்கா அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஜூன் மாதம் பாரீசில் நடைபெறவுள்ளது. சென்ற முறை பேச்சுவார்த்தைத் தந்திரம் மூலம் 469 மில்லியன் உதவியாகப் பெற்றுள்ளது. இம்முறை மீண்டும் நல்ல பிள்ளையாகக் கையுயர்த்துவதற்கு வேண்டிய ''அரசியல் தீர்வு'' நாடகத்தை மீண்டும் நடத்த முனையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதன், சனி : பி.ப. 3மணி, இரவு 8.30
வியாளன் : பி.ப. 3 மணி.
ஞாயிறு : மு.ப. 10 மணி, பி.ப. 3 மணி.

ஆகிய தினங்களில் (SW) 41 மீட்டர், 7000 kh (கிலோஹெட்ஸ்), அலை வரிசையில் ஒலிபரப்பை கேட்கும்போது இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ சற்று திருப்பி எமது ஈழவானொலி நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக கேட்கலாம்.

## சிறுதுளி பெரு வெள்ளம்!

வளர்ச்சியடைந்து கொண்டு செல்லும் ஒரு ''புரட்சிகர இயக்கத்தில்'' பொருளாதார நெருக்கடி நிலை கொள்ளுவது என்பது வரலாற்றுச் சான்று. அச்சுப் பொருட்களின் விலைவாசி பற்றியும் நீங்கள் அறிந்த விடயமே! எமது போராட்டம் என்பது வெறுமனே எதிரியைக் குறிபார்ப்பது மட்டுமல்ல! எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கலுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டியுள்ளது. எமது வெளியீடுகளின் தாமதத்திற்கும் இதுவே காரணம்.

எனவே விடுதலை வெள்ளத்தில், தங்களது பங்களிப்புத் துளிகளாக; ஈழச் செய்திக்கான குறைந்த பட்ச ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா 20 உடன் ஈழ விடுதலை விரும்பிகளிடமிருந்து குறைந்தது 5 சந்தாக்காரர் களையாவது ஏற்படுத்தி தருமாறு அன்பாய் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகட்கு : EPIC, 20, First Street, zackariah Colony,
Choolaimadu, Madras-600 094. (Tel : 422 620)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு தலைவனை கொல்வதின் மூலம் உண்மையானதொரு மக்கள் இயக்கத்தை அழித்துவிட முடியாது!




மரண தண்டனைகள் வழங்குவதற்கு — யாரும் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் அல்ல.

EPIC
20, First Street, Zacaria Colony,
Choolaimedu, MADRAS-600 094
Tel : 422620 (Post Bag : 5551)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF இன்
செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

**EPIC : B. M. Box 1738, London WC1 N 3xx, UK.**
**EPIC : 10, Ruedes Martyrs, 75009 Paris, France.**
**EPIC : Kiehulufer-47, 1000 Berlin-44, W.Germany.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்